## குழந்தைகள் மருத்துவமனை

*3106—திரு. வி. பி. இராசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராசபாளையத்தில் குழந்தைகள் மருத்துவமனை ஏற் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு** டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

இல்லை.

## நோயாளிகளுக்கான இதய வால்வுகள்

* 9024—டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் .கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பொது மருத்துவமனையில் இதய வால்வுகள் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடும் நோயாளிகளுக்கு மருத்துவமனையில் 'வால்வு' இல்லாத காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு** டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வால்வுகளும் தேவையான உபகரணங்களும் தொடர்ந்து கிடைக்கத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் க. காஞ்சனா : தலைவர் அவர்களே, இதயத்திலே உள்ள பழுதுபட்ட ஈறுகள், வால்வுகளை அகற்றிவிட்டு செயற்கை ஈறுகள், வால்வுகளைப் பொருத்துகின்றபோது கடந்த 20 ஆண்டு களாக குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு பொருத்திக்கொண்ட நோயாளிகளுக்கு எந்த உடல் .கோளாறும் ஏற்படாது என்ற

1990 ஏப்ரல் 21]

உத்திரவாதத்துடன் உலகம் முழுவதும் உபயோகப்படுத்தப் படுகின்ற, ஒரு வால்வினுடைய விலை 9,020 ரூபாய் என்று வாங்கப்பட்டுவந்த ஸ்டார் எட்வர்டு வால்வு வாங்கப்படுவது நிறுத்தப்பட்டு, விற்பனைக்கு வந்து இரண்டு வருடங்களே ஆகின்ற உழைப்புக்கு எந்தவிதமான உத்திரவாதமும் தரப் படாத நிலையில் சோரின் வால்வுகள் சென்னை பொது மருத்துவ மனை இதய நோய்ப் பிரிவில் வாங்கப்படுவதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வாங்கப்பட்ட வால்வி னுடைய எண்ணிக்கையே 10 தான். ஆகவே இது அதிகமாக வாங்கப்பட்டது போன்ற குறிப்புகளை எல்லாம் கொடுப்பார்கள் என்று சொன்னால் எங்கேயிருந்து வாங்கப்பட்டது என்ற குறிப்புகளும் கொடுக்கப்படும். இதனுடைய விலை ரூ. 8,528. டில்டிங் டைப் வால்வு ஒன்று 10,575 ரூபாயாக இருக்கிறது. ஆகவே வால்வுகளைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு வாங்கப்பட்டு இருப்பது 10 தான் என்ற காரணத்தினால் மேலும் 50 வால்வுகளை வாங்குவதற்காக அரசு முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது. மருத்துவர் என்ற முறையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற கருத்துக்களையும் அரசு கருத்தில் கொள்ளும்.

டாக்டர் க. காஞ்சனா : தலைவர் அவர்களே;, இந்த ஸ்டார் எட்வர்டு வால்வு ஒன்றின் விலை 8,528 ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது வாங்கப்படுகின்ற சோரின் வால்வு ஒன்றின் விலை 12,000 ரூபாய் என்று ஆகிறது. கிட்டத்தட்ட 3,000 ரூபாய் வித்தியாசம் வருகின்றது. அப்படிப் பார்த்தால் வாங்க இருக் கின்ற 50 வால்வுகளில் அரசுக்கு இழப்பு இலட்சத்து ஐம்பதா யிரம் ரூபாய் என்ற அளவிற்கு வருகிறது. இதனை அரசு கருத் தில் கொள்ளுமா ? இப்படி இந்த பிராண்டை மாற்றி வாங்கு வதற்குக் காரணம் ஏதேனும் உண்டா ? ஹாஸ்பிடல் அத்தா ரிட்டீஸ் காரணமா அல்லது டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் காரணமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, வால்வு கம்பெனிக்காரர்கள் மருத்துவரை அணுகி எங்களுடைய கம்பெனிக்காக வேண்டுமானால் பரிந்துரை செய்யுங்கள் என்று சொல்லியிருக்கலாம். அந்த வால்வுகளை வாங்குவதைப் .பொறுத்த வரையில் அங்கே பர்சேஸ் கமிட்டி என்ற ஒரு கமிட்டி இருக்கிறது. அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில்தான் வால்வுகள் வாங்கப்படுகின்றன.